

மாநில தொண்டர் அணி துணைச் செயலாளராக எஸ்.எம்.கே.அண்ணாதுரை தேர்வு செய்யப்பட்டதை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றுக்கொண்டார். உடன் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி. கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் மற்றும் மாநில தொண்டர் அணி செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் உடன் உள்ளனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - தா.மோ.அன்பரசன் பங்கேற்பு! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை!

# மதுரவாயல் தெற்குப் பகுதியில் முதல்வர் பிறந்த நாள் விழா கவியரங்கம்!

## கவிப்பேரரசு வைரமுத்து தொடக்கவுரை ! கவிமாமணி அப்துல் காதர்- கவிஞர்கள் கவிபாடுகிறார்கள்!

சென்னை, பிப். 27 - சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடும் ஏடும் போற்றும் எழுச்சிமிகு கழக தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு "சுட்டு விரலில் வெற்றி படைக்கும் சூரியன்" என்கிற தலைப்பில் கவியரங்கம் இன்று 27.02.2025 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் வானகரம் ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸில் மதுரவாயல் தெற்குப் பகுதி கழக செயலாளரும், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி தலைமையிலும், மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர்கள் எஸ். அருணாசலம், இராமாபுரம் வ.செல்வகுமார், பகுதி நிர்வாகிகள் செல்வராஜ், எஸ். பாரதி, கே.ராஜி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

கவியரங்கம் தொடக்க உரை கவிப்பேரரசு வைரமுத்து, முன்னிலை; காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமை; கவிமாமணி அப்துல் காதர், கவி பாடுபவர்கள்: கவிஞர் பொன். செல்வகணபதி, கவிஞர் நெல்லை ஜெயந்தா, கவிஞர் சொற்கோ இரா.கருணாநிதி, கவிஞர் இளையகம்பன், கவிஞர் ஜெயச்சந்திரன் ஆகியோர் கவிபாடுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.அரவிந்த் ரமேஷ், எ.எம்.வி..பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், வர்த்தகர் அணி காசிமுத்துமாணிக்கம், பி.டி.பாண்டிசெல்வம், எஸ்.பத்மபிரியா, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி. மாவட்ட நிர்வாகிகள் எஸ். குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன், பகுதி - ஒன்றிய கழக செயலாளர்கள்: கே.கண்ணன், மு.ராஜா, எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், எஸ்.வி.ரவிச்சந்திரன், மதியழகன், துரைகபிலன், அரிமா சு.சேகர், ஜி.வெங்கடேசன்

பொதுக்குழு உறுப்பினர்கள்: வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வீர. கனிமொழி, சைதை சம்பத், சைதை மா. அன்பரசன், எம்.கே.ஏழுமலை, ப.ரவி, உ.துரைராஜ், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், எஸ்.டி.தங்கராஜன், ரா. பாலசுந்தரம், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், தா.பஷீர், டி.ஜே.பாஸ்கர்.

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வி. ராஜேஷ், அ.விஜயபாலா, அருள், கே.குமரேசன், வே. ஆனந்தன், ஏ.கே.ஆனந்த், எஸ்.தீபக், ம.பார்த்திபன், எம்.விநாயகமூர்த்தி, சைதை சாதிக், கழக த.ரமேஷ், தரமணி ஜெகதீசன், பா. அருண்குமார், டி.கனிமொழி, சி.பரிமேலழகன், சி. சுரேஷ், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், ஜி.வரதன், மருத்துவர் அனிஸ், எம்.எஸ்.ஹரிபாபு, கோ. பாஸ்கர், சசிகுமார், . முகேஷ், நிஷாசையத், எஸ். பாலமுருகன், மு.மா. வழ.அ.து. அமைப்பாளர், முகப்பேர் கே.நீலகண்டன், ச.சங்கர்கணேஷ், மா.இ. அ.து.அமைப்பாளர், செ. ரவி, மா.இ.அ.து.அமைப்பாளர் மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி - வில்லிவாக்கம் ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள்: ஆர்.கர்ணல், தீ.பாலாஜி, செந்தில்சுரேஷ், ஆ.மாலினி, ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், ப.கிரிஜா, என்.ரவி மதுரவாயல் தெற்கு - வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்:

எஸ்.ரமேஷ்ராஜ், த. ரமேஷ், சி.சுந்தர், அ. மோசஸ், தி.சார்லஸ், ஆ.செல்வம் எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எம்.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம். ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் ஹேமலதா கணபதி, செல்விரமேஷ், சாந்திஇராமலிங்கம், ஸ்டாலின், ரமணி மாதவன், மற்றும் தொகுதிக் குட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள். வே.மதியழகன், இரா.பால் பாண்டியன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### ஆவடி அடுத்த நடுக்குத்தகை ஊராட்சியில்

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் 100 கர்ப்பிணிப் பெண்களுக்கு சீர்வரிசைகள் வழங்கினார்!

திருவள்ளூர் பிப் 27;

திருவள்ளூர் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் நடுகுத்தகை ஊராட்சியில் பூவிருந்தவல்லி வட்டாரம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் பணிகள் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு ஆவடி பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 100 கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைகள் வழங்கி வாழ்த்தி பேசினார்.

ஒரு குழந்தையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற குழந்தையின் முதல் 1000 நாட்கள் நல்ல வளர்ச்சி செயல்பாட்டால் அறிவு திறன் உணர்வு மேம்பாடு அணுகுமுறை ஆகியவற்றில் ஈடுபடுகிறது. அதேபோல் வயிற்றில் வளரும் குழந்தைக்கு கர்ப்ப காலத்தில் தாய் நல்ல சத்தான உணவை உண்டால்தான் குழந்தையின் வளர்ச்சி சீராக இருக்கும். இந்த 1000 நாட்களில் சீரான வகையில் தாய்ப்பால் உரிய ஊட்டுச்சத்து நல்ல சுகாதார முறைகள் அன்பான அரவணைப்பு ஆகியவற்றை வழங்கினால் குழந்தை முழுமையான வளர்ச்சி பெறும். மேலும் கர்ப்ப காலத்தில் ஒரு கர்ப்பிணிக்கு சுகாதாரம் ஊட்டச்சத்து எந்த அளவு முக்கியம் அந்த அளவு தாயின் மகிழ்ச்சி மிகவும் அவசியம் அதற்கான சூழ்நிலையும் கர்ப்பிணிக்கு குடும்பத்தினர் ஏற்படுத்தி தர வேண்டும். அந்த ஒரு வாய்ப்பை இந்த வளைகாப்பு நிகழ்ச்சி அமைத்து தந்துள்ளது

முகாமில் ஆயிரம் நாட்கள் முக்கியத்துவம் ரத்த சோகை, சரிவிகித உணவு, தன் சுத்தம், தாய்ப் பாலில் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு கண்காட்சி, மருத்துவ முகாம் ஆகியவற்றை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

எனவே தாய்மார்கள் குழந்தையை நன்றாக பெற்றெடுத்து நம் தமிழ் மண்ணுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் வளர்த்திட வேண்டும் என்று தெரிவித்து வாழ்த்துக்கள் கூறினார்

நிகழ்ச்சி முடிவில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு தட்டு வளையல் புடவை போன்றவையும் ஐந்து வகையான கலவை சாதங்கள் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., மாவட்ட திட்ட அலுவலர் எஸ். கே.லலிதா, குழந்தை வளர்ச்சி வட்டார அலுவலர் அ.ச. சங்கீதா தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், தி.வை.ரவி, மாவட்ட நிர்வாகிகள் மா. ராஜ், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், ஜி.விமல் வர்ஷன் , நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி, யமுனா ரமேஷ், மாவட்ட இளைஞரணி கே. சுரேஷ்குமார், பொறியாளர் எம். மோகன், சி.அண்ணா குமார், ப.கந்தன், நேமிலி சுரேஷ் குமார், கு.தமிழ்செல்வி, லட்சுமி, பி.எல்.ஆர்.யோகா தேவி, அக்னி ராஜேஷ், தெய்வசிகாமணி, இ.ஏ.சந்திரன், சாந்தகுமாரி, ஹரிபாபு, ரமேஷ், ராதா அசோக் குமார், ஜி.பிரவீன்குமார், எம்.உதயா, இ.வி.பி.பிரதீப், எஸ்.சுதர்சனம், பட்டாணி கார்த்திக், பிரசன்னா, வி. மகேஷ்குமார், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி காவல் ஆணையரகத்திற்குட்பட்ட செங்குன்றம் அனைத்து மகளிர் புதிய காவல் நிலையத்தினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார். உடன் ஆவடி காவல் ஆணையர் கே.சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், துரை சந்திரசேகர், ஆவடி கூடுதல் காவல் ஆணையாளர் கே.பவானீஸ்வரி, செங்குன்றம் காவல் துணை ஆணையர், கே.எஸ்.பாலகிருஷ்ணன், உதவி இயக்குனர் பேரூராட்சிகள் ஜெயக்குமார், நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் யமுனா, பேரூராட்சித் தலைவர் தமிழரசி மற்றும் காவல்துறை சேர்ந்து உயர் அலுவலர்கள் காவல் ஆய்வாளர்கள் காவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை (25.2.2025) அன்று, ஹாங்காங்கில் நடைபெற்ற IODA ஆசிய மற்றும் ஓசியானிக் சாம்பியன்ஷிப், ஆஸ்திரேலியன் சாம்பியன்ஷிப், லங்காவி இன்டர்நேஷனல் ரெகாட்டா ஆகிய போட்டிகளில் தங்கப் பதக்கமும், கத்தார் சர்வதேச சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப்பதக்கமும் வென்ற தமிழ்நாட்டின் பாய்மரப் படகோட்டும் வீராங்கனை செல்வி. ஸ்ரேயா கிருஷ்ணா லட்சுமிநாராயணன் (வயது 14) சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.



மாநில தொண்டர் அணி துணைச் செயலாளராக எஸ்.எம்.கே.அண்ணாதுரை தேர்வு செய்யப்பட்டதை முன்னிட்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றுக்கொண்டார். சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் உடன் உள்ளனர்.

# மயிலை கபாலீஸ்வரர் கோயிலில் மகா சிவராத்திரி விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப். 27 - சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் நடைபெற்ற மகா சிவராத்திரி பெருவிழாவை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 9 திருக்கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி பெருவிழா நேற்று (26.02.2025) ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கியது. சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் கபாலீசுவரர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மகா சிவராத்திரி பெருவிழாவினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

மகாசிவராத்திரி விழா 26.02.2025 மாலை 6 மணி முதல் 27.02.2025 காலை 6 மணி வரை சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை, அருணாச்சலேசுவரர் திருக்கோயில், தஞ்சாவூர், பிரகதீசுவரர் திருக்கோயில், திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயில், பேரூர், பட்டீசுவரர் திருக்கோயில், மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவானைக்காவல், ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவாரூர், தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் ஆகிய 9 திருக்கோயில்கள் சார்பில் ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளுடன் பிரம்மாண்டமாய் கொண்டாடப்படுகின்றது.

மயிலாப்பூர், கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார். முன்னதாக மங்கள இசை மற்றும் திருமுறை விண்ணப்பம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து,

டாக்டர் எஸ்.சௌமியாவின் சிவதாண்டவ ஸ்துதி, நாட்டிய வடிவு, வாய்ப்பாட்டு மற்றும் தாளவாத்திய இன்னிசை, வில்லுப்பாட்டு, இறை அருட்செல்வி தியாவின் பக்தி பாடல்கள், திருமதி நந்தினி சுரேஷ் பரதநாட்டிய நிகழ்ச்சி, கலை இளமணி குமாரி ஸ்வராத்மிகா குழுவினரின் சிவபக்தி பாடல்கள், திருமதி ஊர்மிளா சத்ய நாராயணா பரதநாட்டிய நிகழ்ச்சி, திருமதி பாரதி பாஸ்கர் சொற்பொழிவு, சிவசக்தியும் சினிமாவும் என்ற இசை நிகழ்ச்சி, கலைமாமணி தேச மங்கையர்க்கரசி சிவ உபதேசம் என்ற தலைப்பில் ஆன்மிக சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்நிகழ்ச்சியில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசகன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி பெ.க.கவெனிதா, திருக்கோயில் அறங்காவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. 1000 பேருக்கு உணவு வழங்குகிறார்

# காஞ்சிபுரம் தெற்கு சாலவாக்கம் ஒன்றியம் சார்பில் 1072 பேருக்கு நல உதவிகள்!

## ஒன்றியச் செயலாளர் டி.குமார் தலைமை! கந்திலி கரிகாலன் –க.செல்வம் எம்.பி. பங்கேற்பு!

காஞ்சிபுரம், பிப். 27- காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றிய தி.மு.க. மக்கள் நலன் காக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி 1072 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டம் இன்று ( 27.2.2025 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு திருமுக்கூடலில் ஒன்றியச் செயலாளர் டி.குமார் தலைமையில் நடைபெறுகிறது. ஊராட்சி செயலாளர் எஸ்.உதயா வரவேற்கிறார்.

இதில் மஞ்சுளா முருகன், இ.சண்முகம், ஆர்.முருகன், என்.சம்மந்தம், பாண்டிதுரை, வி.ராதாகிருஷ்ணன், எஸ்.ராஜேந்திரன், பி.அரிகிருஷ்ணன், டி. உதயகுமார், ஜி.சுகுமார், கவிதா செல்வம், தாந்தோணி, எம்.சேட்டு, ஸ்ரீதர், சீதாராமன், டி.கே. கதிரவன், ஏ.கார்த்திகேயன், மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் நல உதவிகள் வழங்குகிறார். இக்கூட்டத்தில் கந்திலி கரிகாலன் சிறப்புரையாற்றுகிறார். மேலும் சிறுவேடல் க.செல்வம் எம்.பி.,

உத்திரமேரூர் ஒன்றியச் செயலளார் கெ.ஞானசேகரன், ஞா. ஹேமலதா, கு.வசந்தி, ஜி.சிவராமன், எஸ்.ஆர்.வெங்கடேசன், கு.துரைவேல், ப.கார்த்திகேயன், என்.எஸ்.பாரிவள்ளல், எஸ்.ஆர்.அப்பாதுரை, எஸ்.பி.நடராஜன், த.சத்தியமூர்த்தி, த.சத்தியமூர்த்தி, என்.மணி. ப.சசிகுமார், சு.முரளிதரன், எஸ்.ரத்தினமாலா, சாலவாக்கம் ஒன்றிய நிர்வாகிகள் என்.எஸ். ரவி, வி.ஞானசேகரன், ஜெ.சுஜாதா, பி.வெ.பாலமுருகன், ஆர்.வெங்கடசுப்பிரமணி, வி.பாண்டியன், ஐ.பாபுஷரீப், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் த. அன்பு ராஜ், ஆர்.கல்யாணசுந்தரம், பி.சேகர், ஆர்.சந்திரா, பவுன்சின்ராஜ், நதியா கோபி, பி.சுப்பிர மணி, தீபாகாமராஜ் ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் க.வெங்கட்ராமன், டி. கோகுலகண்ணன், செ. விஷ்ணு, க.கன்னியம்மாள், சு.பலராமன், பி.வி.அழகப்பன், ஏ.நந்தா, மாசிலா கோபி, பி.கார்த்தி, எஸ்.கௌரிநாதன், எ.தர்மராஜ், லீலாவினோதன், சந்தோஷ்பாலாஜி, வீரபாண்டி, பழனி, மோகன், பழனி, மலை. அருண்பிரசாத் கங்கா, கீதா, வீரம்மாள், பபிதா, ஜெயசுதா, தமயந்தி, செல்வி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

மு.சீனிவாசன் நன்றி கூறுகிறார்.

# தி.மு.க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## தி.மு.க. மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 26 - கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க மாநில நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (27.02.2025 - வியாழக் கிழமை) காலை 10 மணியளவில் திருவொற்றியூர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. இல்லத்தில் மாநில தலைவர் இராபெர்னார்டு, மாநில துணைத் தலைவர்கள் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., இரா.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் எனது (கழக மீனவர் அணிச் செயலாளர் அஜோசப் ஸ்டாலின்), தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து கழக மாநில மீனவர் அணி நிர்வாகி களும் கலந்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்


பொருள்: மீனவ மக்களின் நம்பிக்கை நாயகர், முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழா, அணியின் வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சென்னை மேற்கு மாவட்ட

# மாணவர் அணி அறிமுக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை!



சென்னை மேற்கு மாவட்ட கழக மாணவர் அணி அறிமுக ஆலோசனை கூட்டம் இன்று (27.2.2025) வியாழக்கிழமை காலை 11.00 மணி அளவில் மாவட்ட கழகம் அமைந்துள்ள எண்.20/32 காம்தார் நகர் முதல் தெரு நுங்கம்பாக்கம் சென்னை-600 034ல் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அவர்கள் தலைமையில், மாணவர் அணி மாநில இணை செயலாளர் எஸ்.மோகன் முன்னிலையில் நடைபெறுகிறது.

இதில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட / பகுதி மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா குறித்து மற்றும் கழக ஆக்கப் பணிகள்

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.